10th August 1965]

ரசாயன உரம்

*180 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மத்திய அரசிடம் இம்மாநில அரசாங்கம் 1965-66-ம் ஆண்டிற்கு எவ்வளவு டன் ரசாயன உரம் ஒதுக்க விண்ணப்பித்துள்ளது, அதில் இதுவரை ஒதுக்கப்பட்ட அளவு எவ்வளவு?

கனம் திரு. பூ. கக்கன் : 5,20,000 (ஐந்து இலட்சத்து இருபதாயிரம்) டன் அம்மோனியம் சல்பேட்டுக்குச் சமமான இரசாயன உரம்.

2,41,668 (இரண்டு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டு) டன் அம்மோனியம் சல்பேட்டிற்கு சமமான இரசாயன உரம்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், மத்திய அரசிடம், நமது மாநில அரசாங்கம் ரசாயனம் உரம் எவ்வளவு கேட்டது? மத்திய அரசு எவ்வளவு கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்? அதில் இதுவரையில் எத்தனை டன் வந்திருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : 1965—66-லே கேட்கும்பொழுது அம்மோனியம் சல்பேட் 2,72,000 டன், யூரியா 1 லட்சம் டன், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட் 10,000 டன், கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் 10,000 டன் கேட்டோம். மொத்தம் 5,20,000 டன் கேட்டோம். அவர்கள் கொடுத்தது—

	Tons.
Allocation made by the Government of India during the quarter during 30th June 1965 ..	112,943
Allocation for the quarter ending 30th September 1965	128,725
Total allocation made by the Government of India for half year ending 30th September 1965 ..	241,668

திரு. ஜே. மாதா கவுடர் : நம்முடைய மாநிலத்தின் தேவையை பூர்த்தி செய்யும் அளவில் ரசாயன உரம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை நம்முடைய மாநிலத்தில் நிறுவ அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா ? 9-00 am

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது தனிப்பட்டவர்கள் சிறிய அளவிலே உரத் தொழிற்சாலைகளை நடத்த லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலையாக இந்த மாநிலத்தில் வைப்பதற்கில்லை. குறிப்பாக நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி கலப்பு உரம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும். மத்திய சர்க்காரிலிருந்து அதிகமான உரம் கிடைக்கும்போது அதை வாங்கி விநியோகிக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த அம்மோனியம் சல்பேட் ஜில்லாவாரியாக ஒதுக்கப்படுவதில் எந்த அடிப்படையை அரசாங்கம் கைக்கொண்டிருக்கிறது? ஜனத்தொகை அடிப் படையா, அல்லது விவசாய நிலங்களின் அடிப்படையா?

கனம் திரு. பூ. கக்கன் : ஆங்காங்கே இருக்கிற நிலப்பரப்புக்குத் தக்கபடி, வேண்டுகோளுக்குத் தக்கபடி, ஏற்கனவே கொடுக்கப் பட்டிருக்கிற அளவுகளுக்குத் தக்கபடி, விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

Agricultural Research Stations in Thanjavur District

* 181 Q.—SRI C. M. AMBIKAPATHI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the Agricultural Research Station at Aduthurai, Thanjavur district is not able to conduct soil testing, commensurate with the demand made by agriculturists; and

(*b*) whether there is any proposal to set up more research stations for soil testing at each taluk headquarters in Thanjavur district?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Soil Testing Laboratory at Aduthurai which has been strengthened and fully equipped with the aid of the Ford Foundation, will be able to meet the demands of the Agriculturists in Thanjavur District.

(*b*) The answer is in the negative.

பூமி வெடிப்புக்கள்

* 182 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர் :
திரு. கோ. சி. மணி: } கனம்

உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் தஞ்சை மாவட்டத்தில், சில பகுதிகளில் பூமி வெடிப்பு ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில்?

(உ) அரசாங்கம் இது குறித்து மேற்கொண்டுள்ள நடவடிக் கைகள் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) Vannarapettai Village.

(*c*) The State Geologist, Guindy, who inspected the site is of the view that the fissures and cracks could be attributed to local subsidence and that they are of a local nature. He is also of the opinion that the evidence does not indicate any possibility of major structural disturbance which could cause land-slide, earthquake or any other catastrophic movements. As there is no major calamity in the village, no relief measures have been undertaken.